## கிள்ளான் பள்ளத்தாக்கில் பேருந்துகளுக்கு

# சிறப்பு வழித்தடங்கள்

புத்ராஜெயா, மார்ச் 7- கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதிகளில் சாலையில் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அங்குள்ள சாலைகளில் பேருந்துகள் செல்வதற்குச் சிறப்பு வழித்தடங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என துணைப்பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடி கூறினார்.

இதற்காகவும் மாற்றுப் பயணங்களுக்காகவும் 100 வேன்களை வாங்குவதற்காகவும் அரசாங்கம் 5 கோடி ரிங்கிட்டை ஒதுக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஜூலை 3ஆம் தேதி முதல் ஜாலான் அம்பாங், கெந்திங் கிளாங் சாலைகளில் பிரசரனா பேருந்துகளுக்குச் சிறப்பு வழித்தடங்களைத் திறந்துள்ளதால் மக்களின் நேரம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளதாக மேற்கொண்ட ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளதாக நேற்று சாலை நெருக்கடி, பாதுகாப்பு மீதான அமைச்சரவைக் குழுக் கூட்டத்திற்குத் தலைமையேற்ற பின்னர் அக்குழுவின் தலைவரான அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பொதுமக்கள் பேருந்துகளில் செல்வதால் அவர்களுக்கான நேரம் 18 நிமிடங்கள் வரை மிச்சப்படுத்தப்படுவதாக அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாகக் கூறிய அவர், நாட்டில் பேருந்துகளில் நாள்தோறும் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையும் 20 முதல் 45 விழுக்காடு வரை உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் பேருந்து சேவைகளைப் பயன்படுத்துவதன் வழி அவர்களின் நேரம் மிச்சப்படுத்தப்பட்டுள்ளதால் தலைநகரிலுள்ள சாலைகளில் பேருந்துகளுக்கான வழித்தடங்களை மேலும் அதிகரிப்பதற்கு இக்குழு முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வரும் ஜூன் மாதம் முதல் ஜாலான் கிளாங் லாமாவில் பேருந்துகளுக்காகக் கூடுதல் வழித்தடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இக்குழு முடிவு செய்துள்ளது.

ஜாலான் செராஸ், கூட்டரசு நெடுஞ்சாலை ஆகியவற்றில் பேருந்துகளுக்கான சிறப்பு வழித்தடங்களை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.



சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும்போது அங்கு மாற்று வழிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான புதிய வழிமுறைகளை அரசாங்கம் ஆராயும் எனவும் அவர் கூறினார்.

போலீஸ், கோலாலம்பூர் மாநகர் மன்றம், பொதுப்பணி இலாகா ஆகியோரிடம் இருந்து போதுமான தகவல்களைப் பெற்ற பின்னர் இது அமல்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அலுவலக நேரங்களில் சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மாற்று வழிகளை அமல்படுத்துவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு மாற்று வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என மிரோஸ் எனப்படும் மலேசிய சாலைப் பாதுகாப்பு ஆய்வுக் கழகம் மேற்கொண்ட ஓர் ஆய்வில் 88 விழுக்காடு நெடுஞ்சாலை வாகனமோட்டிகள் தங்களின் கருத்துகளை முன்வைத்துள்ளதும் தெரியவந்துள்ளது.

மழைக்கால நேரத்திலும் இரவு நேரத்திலும் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு அமலாக்கப் பிரிவினர் தங்களின் சோதனை நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் எனவும் இக்குழு முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அலுவலக நேரங்களில் சாலைகளில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அதிகமான மக்கள் எம்ஆர்டி, எல்ஆர்டி உட்பட மின்சார ரயில் சேவைகளைப் பயன்படுத்து வதை அரசாங்கம் ஊக்குவித்து வருவதாகவும் அவர் சொன்னார்.

கடந்தாண்டு நாட்டில் ஏற்பட்ட சாலை விபத்துகள் குறித்து கருத்துரைத்த அவர், 6,443 பேர் சாலை விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். நாள் ஒன்றுக்கு 18 பேரும் 80 நிமிடங்களுக்கு ஒருவரும் நாட்டில் சாலை விபத்தில் உயிரிழந்து வருவதாகவும் துணைப்பிரதமர் கூறினார்.